இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கட்கிழமை 01.12.2025

# ஒன்றிய அரசின் மீதான குற்றப்பத்திரிக்கை!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நடைபெற்ற தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஒன்றிய பா.ஜ.க. அரசின் மீதான குற்றப்பத்திரிக்கையைப் போல அமைந்துள்ளது.

நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடர் இன்றைய தினம் தொடங்க இருக்கிறது. இதில் எழுப்ப வேண்டிய முக்கியப் பிரச்சினைகளை வரிசைப்படுத்தியே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

‘எதற்கெடுத்தாலும் குறை சொல்கிறோம்’, ‘எதையும் எதிர்க்கிறார்கள்’, ‘அனைத்தையும் விமர்சிக்கிறார்கள்’ என்று தி.மு.க. மீது ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர்கள் புகார் சொல்லித் திரிகிறார்கள். ஆனால் **தி.மு.க. வைக்கும் குற்றச் சாட்டுகளுக்கு பதில் சொல்வது இல்லை. எழுப்பும் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிப்பது இல்லை. தமிழ்நாட்டுக்கான சிறப்புத் திட்டங்கள் ஏதுமில்லை. தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசின் நிதியை முறையாக வழங்குவது இல்லை. இவை எதற்கும் நேரடியாக பதில் சொல்லாமல், அவதூறு பதில்களையே பா.ஜ.க. தரப்பு இதுவரை வைத்து வருகிறது.**

இந்த நிலையில்தான் நாடாளுமன்றத்தில் எழுப்ப வேண்டிய கோரிக்கை முழக்கங்களை தி.மு.க. தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தீர்மானங்களாக வடிவமைத்து வழங்கி இருக்கிறார்.

**“நம் மாநிலத்தின் வளர்ச்சியைப் பார்த்து ஒன்றிய பா.ஜ.க. அரசு பொறாமைப்படுகிறது. நிதி ஆணையத்தின் வாயிலாக நிதி ஒதுக்குவதில் பாரபட்சம் காட்டுகிறது. நிதி ஆணையம் அளித்துள்ள அதிகாரப் பகிர்வுகளை அளிக்க மறுக்கிறது. மாநிலங்களில் செயல்படுத்தப்படும் ஒன்றிய அரசின் நிதிட்டங்களின் நிதிச்சுமையை மாநிலங்களின் தலையில் கட்டுகிறார்கள். பா.ஜ.க., அதன் கூட்டணிக் கட்சி ஆளும் மாநிலத்துக்கு மட்டுமே நன்மையைச் செய்கிறது. மற்ற மாநிலங்களை புறக்கணிக்கிறது. ஆளுநர்கள் மூலமாக கூட்டாட்சித் தன்மையை சீர்குலைக்கிறது”** என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு மீது குற்றச்சாட்டுகளை அடுக்கி இருக்கிறது தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தின் மூலமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

1. புதிய ரயில்வே திட்டங்கள் இல்லை. பத்து ஆண்டுகளுக்கு முன்பு அறிவிக்கப்பட்ட திட்டங்களையும் நிறைவேற்றுவது இல்லை. புதிய வழித்தடத்துக்காக அறிவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ.31 ஆயிரம் கோடி என்றால் தெற்கு ரயில்வேக்கு ரூ.301 கோடி மட்டும்தான்.

2.பொய்யான காரணத்தைச் சொல்லி கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை முடக்கி விட்டார்கள்.

3. கோவை, மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்துக்கு ஒப்புதல் தரவில்லை. மதுரை பன்னாட்டு விமான நிலையத்துக்கும் ஒப்புதல் தரவில்லை.

4. கும்பகோணத்தில் அமைய உள்ள கலைஞர் பல்கலைக் கழக சட்டமுன் வடிவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்காமல் வைத்துள்ளார்.

5. பொது விநியோகத் திட்டம் மற்றும் ஒன்றிய அரசின்பிற நலத்திட்டங்களுக்குச் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கிவரும் நிலையில், அதற்கு முட்டுக்கட்டை போடும் விதிமுறைகளை ஒன்றிய அரசு வகுத்துள்ளது. இதனை நீக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர், பிரதமர் அவர்களுக்கு கடிதம் மூலமாக எழுதி கோரிக்கை வைத்துள்ளார்.

6. நெல் கொள்முதல் ஈரப்பதத்தை 17 விழுக்காட்டில் இருந்து 22 விழுக்காடாக உயர்த்த வேண்டும்.

7. தமிழ்நாட்டிற்கு சமக்ரசிக்ஷா திட்டத்தின்கீழ் விடுவிக்கப்பட வேண்டிய 3548.22 கோடி ரூபாயை இதுவரை ஒன்றிய அரசு விடுவிக்காமல்நிறுத்தி வைத்துள்ளது.

8. தொழிலாளர் சட்டங்கள் தொடர்பாக தமிழ்நாடு அரசால் எடுத்து வைக்கப்பட்ட கருத்துகளை ஒன்றிய அரசு ஏற்கவில்லை. தொழிலாளர் நலச்சட்டத் தொகுப்புகள் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள தொழிலாளர்களின் உரிமைகளை, நலன்களைப் பாதிக்கக்கூடாது.

9. இலங்கை கடற்படையால் இந்திய மீனவர்கள் பாதிக்கப்படுவதற்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும்.

10. ஆசிரியர்களுக்காக கட்டாயத் தேர்வை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளது. தற்போது ஆசிரியர்களாக பணிபுரிபவர்களின் பணி மற்றும் பதவி உயர்வை ஒன்றிய அரசு பாதுகாக்க வேண்டும். உரிய சட்டத் திருத்தம் செய்ய வேண்டும்.

11. கிராமப்புற ஏழைகளுக்கு மிக முக்கியமான திட்டமாக இருக்கும் மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை முடக்க நினைக்கிறது பா.ஜ.க. அரசு. தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய ரூ.1,290 கோடியை உடனடியாக வழங்க வேண்டும். இதற்கான நாட்களையும் குறைத்துள்ளார்கள். அதனையும் அதிகரிக்க வேண்டும்.

இவைதான் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கியத் தீர்மானங்கள் ஆகும்.

சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க கால நிர்ணயம் செய்யும் சட்டப் போராட்டத்தின் ஒரு பகுதியாக இதனை நாடாளுமன்றத்தில் எழுப்ப தி.மு.க. உறுப்பினர்கள் முடிவு எடுத்துள்ளார்கள்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, ஆர்.மகாதேவன் அடங்கிய அமர்வு அளித்த தீர்ப்பில், “**மசோதா மீது ஒரு மாதத்துக்குள் ஆளுநர் முடிவெடுக்க வேண்டும், மசோதாவை நிறுத்தி வைப்பதாக இருந்தால் மூன்று மாதத்துக்குள் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும், மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதாக இருந்தால் மூன்று மாதங்களுக்குள் அதனைச் செய்ய வேண்டும், மறுபரிசீலனை செய்வதற்காக மசோதாவை மாநில அரசுக்கு அனுப்பி, அதே மசோதாவை இரண்டாவது முறையாக ஆளுநருக்கு வந்தால் அதற்கு உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும்**” என்று குறிப்பிட்டு இருந்தது. இதனை நாடாளுமன்றத்தில் ஒலிக்க இருக்கிறது தி.மு.க.

தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஏதோ பா.ஜ.க.வுக்கும் தி.மு.க.வுக்குமான அரசியல் மோதல்கள் அல்ல. தமிழ்நாட்டுக்கான கோரிக்கைகள், தேவைகள் ஆகியவை தான் தீர்மானமாக வடித்துத் தரப்பட்டுள்ளது. இக்கோரிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு உடனடியாக நிறைவேற்றித் தந்தாக வேண்டும். மேலும் மேலும் பசப்புப் பதில்களை பா.ஜ.க. சொல்லி வந்தால் அரசியல் நெருக்கடிக்கு மேலும் மேலும் உள்ளாகும்.



முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்பேரில், கழக மாணவர் அணியினர், கல்லூரிகள் தோறும் தமிழ் மாணவர் மன்ற அமைப்புகளை உருவாக்கி வருகிறது. மாணவர் மன்றங்களை சேர்ந்த 400க்கும் மேற்பட்டோர் கழகத் தலைவர் அவர்களை நேற்று (29.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என். நேரு, கழகத் துணைப் பொதுச் செயலாளர்கள் ஆ.ராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., கழக மாணவர் அணி செயலாளர் இரா. ராஜீவ் காந்தி, கழக மாணவர் அணி மாநில துணைச் செயலாளர்கள் தமிழ் கா.அமுதரசன், வி.கே.ஜெ. இராமகிருஷ்ணன் மற்றும் தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

தமிழ்நாட்டில்

# எச்.ஐ.வி. தொற்றின் தாக்கம் குறைந்துள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின்–‘உலக எய்ட்ஸ் நாள்’ செய்தி!

சென்னை,டிச.1–

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உலக எய்ட்ஸ் நாள் – 2025–ஐ யொட்டி வெளியிட்டுள்ள செய்தியில் “தமிழ்நாட்டில் எச்.ஐ.வி. தொற்றின் தாக்கம் குறைந்துள்ளது என்று கூறியுள்ளார்.**

முதல்வர் அவர்களின் ‘உலக எய்ட்ஸ் நாள்–2025’ செய்தி வருமாறு:-

1986ஆம் ஆண்டு சென்னையில் முதன் முதலாக எச்.ஐ.வி தொற்று கண்டறியப்பட்ட நாள் முதல் இன்று வரை தமிழ்நாடு அரசு, எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு பணியில் கடந்து வந்த 39 ஆண்டு காலப் பணியானது மிக நெடியதும், வெற்றிகரமானதும் ஆகும்.

புதிய எச்.ஐ.வி தொற்றினை முற்றிலும் தடுக்கும் விதமாக மாநில அரசின் கீழ் இயங்கி வரும் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து எச்.ஐ.வி தடுப்பு பணியினை திறன்பட செயல்படுத்தியமையால், தமிழ்நாட்டில் எச்.ஐ.வி தொற்றின் தாக்கம் 2002ஆம் ஆண்டில் 1.11 என்ற விழுக்காட்டிலிருந்து, 2023-24ஆம் நிதியாண்டில் 0.16 என்ற விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது தேசிய அளவின் சராசரியான 0.23 விழுக்காட்டை விடக் குறைவானதாகும்.

### மாற்று அணுகுமுறை தேவை!

ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் முதல் நாள் உலக எய்ட்ஸ் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இவ்வாண்டிற்கான உலக எய்ட்ஸ் தினத்தின் மையக்கருத்து, “Overcoming disruption, transforming the AIDS response”, “இடையூறுகளைக் கடந்து எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பான எதிர்வினை களை மாற்றுதல்“. அதாவது, உலக அளவில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பான தடுப்பு நடவடிக்கைகள் உயர்ந்துள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் எய்ட்ஸை முடிவுக்கு கொண்டு வருவதற்கான இலக்கினை அடையும் வகையில், இன்றைய சூழலைக் கருத்தில் கொண்டு அபாயங்களைக் குறைப்பதற்கு, ஒரு மாற்று அணுகுமுறை தேவை என்பதாகும்.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் மூலமாக, எச்.ஐ.வி தொற்றைக் கண்டறிய 2,600 நம்பிக்கை மையங்களும், எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்க 81 கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்களும், 172 இணை கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்களும் செயல்பட்டு வருகின்றன. எச்.ஐ.வி தொற்றுள்ள பெற்றோரிடமிருந்து கருவிலுள்ள குழந்தைகளுக்கு நோய் பரவாமல் தடுத்திட அனைத்து கர்ப்பிணி பெண்களுக்கும் எச்.ஐ.வி மற்றும் சிபிலிஸ் பரிசோதனையினை அரசு மருத்துவமனைகளில் செயல்படும் “நம்பிக்கை மையங்கள்” வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சமூக அடிப்படையிலான அமைப்புகளுடன் இணைந்து நகர்ப்புறங்களில் அதிக பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ள இலக்கு மக்களுக்கான (MSM, FSW, IDU, திருநங்கைகள் & புலம் பெயர்ந்தோர்) திட்டங்களை, 87 அரசு சாரா நிறுவனங்கள் செயல்படுத்தி வருகிறது.

### 7,618 குழந்தைகளுக்கு மாதாந்திர நிதி உதவி!

தமிழ்நாடு அரசு 2025-26ஆம் நிதியாண்டில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக்கோரிக்கையில், எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றுக்கு உள்ளான மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து, கல்வி மற்றும் மருத்துவ தேவைகளுக்கு நிதி உதவியாக மாதந்தோறும் ரூ.1000/ வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலமாக 7,618 குழந்தைகளுக்கு மாதாந்திர நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிதியாண்டில் (2025-26) மாவட்ட அளவில் ஒருங்கிணைந்த தன்னார்வ பரிசோதனை முகாம்கள் (Integrated Health Campaign) ஏற்படுத்தி, எச்.ஐ.வி தொடர் சங்கிலி தொற்றினை கண்காணித்து (Index Case Finding and Testing) எச்.ஐ.வி தொற்றுள்ளோரின் பாலியல் பங்காளர்கள் அவர்களின் துணைவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு தீவிர பரிசோதனை முகாம்கள் (Index testing campaign) மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகளின் மூலம் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், இந்த ஆண்டில் சர்வதேச இளைஞர் தினத்தினை முன்னிட்டு மாநில மற்றும் மாவட்ட அளவில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த ஆகஸ்ட் 12 முதல் அக்டோபர் 12, 2025 வரையிலான நாட்களில் சுமார் 2.30 இலட்சம் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் தீவிர விழிப்புணர்வு பிரச்சார சேவையினை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு செஞ்சுருள் சங்கங்களின் (Red Ribbon Clubs) வாயிலாக, எச்.ஐ.வி/எய்ட்ஸ் விழிப்புணர்வு மற்றும் பால்வினை நோய் தொற்று குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் புதிய எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்று இல்லாத நிலையினை உருவாக்கிட உறுதியேற்று, எச்.ஐ.வி தொற்றுடன் வாழும் மக்கள் ஒவ்வொருவரும் சம வாய்ப்புடன், தகுந்த மரியாதை மற்றும் மதிப்புடன் நடத்தி எவ்வித பாகுபாடும், ஒதுக்குதலுமின்றி அவர்களுக்கு அன்பையும் ஆதரவையும் அளிக்க வேண்டும் என நான் உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது செய்தியில் கூறியுள்ளார்.

# துபாயில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## துபாய் மீரான் தலைமை! “தமிழ் கேள்வி” செந்தில் வேல் சிறப்புரை!

குவைத், டிச.1–

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் துபாயில் எளியோர் எழுச்சி நாளாகக் கொண்டாடப்பட்டது. 26.11.25 அன்று மாலை நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு அமீரக திமுக அமைப்பாளரும் , அயலக தமிழர் நல வாரிய உறுப்பினருமான துபாய் மீரான் தலைமை வகித்தார்.

நிகழ்வில் திராவிட இயக்கச் சிந்தனையாளரும் மூத்த ஊடகவியலாளருமான தமிழ் கேள்வி தி. செந்தில் வேல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். செந்தில் வேல் எழுதிய திராவிடம் 2.0 ஏன்.? எதற்கு..? மற்றும் காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு ஆகிய நூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன .

அமீரக எழுத்தாளர் குழுமத்தின் ஆசீப் மீரான் வரவேற்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமீரக திமுக அமைப்பாளர் எஸ்.எஸ். மீரான் நவம்பர் 27 ல் பிறந்தநாள் காணும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் , டிசம்பர் 2 ல் பிறந்தநாள் காணும் பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கு ஒரு சேர பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு, தன்னுடைய அழைப்பினை ஏற்று வருகை புரிந்த தமிழ் கேள்வி” தி செந்தில் வேல் “அவர்களுக்கு பாராட்டுகளை தெரிவித்து கொண்டார். மேலும் இன்றைய கால அரசியல் சூழலை கருத்தில் கொண்டு ஊடகவியலாளர் செந்தில்வேல் போன்றோர்களின் தேவைகளை அனைவரும் உணர்ந்திருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். அதே போல தமிழ் நாட்டில் நடந்து கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சியை திறம்பட வழி நடத்திக்கொண்டிருக்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் கரங்களை வலுப்படுத்தி, கூடிய விரைவில் வரவிருக்கும் 2026 சட்டமன்ற தேர்தலை மனதில் கொண்டு அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டிட வேண்டும் என கோரிக்கை வைத்து, அமீரக திமுகவின் அழைப்பினை ஏற்று வருகை புரிந்த அனைவருக்கும் நன்றியினை தெரிவித்து கொண்டார்.



அதனை தொடர்ந்து பேசிய சிறப்பு விருந்தினர் ஊடகவியாளர் ‘தமிழ் கேள்வி’ தி செந்தில் வேல் தமிழ்நாட்டு துணை முதலமைச்சருக்கு முதலில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார். தொடர்ந்து பேசியவர் வரவிருக்கின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக மீண்டும் ஆட்சியில் அமர வேண்டும் என்றால் பாசிசத்தின் சதிகளை முறியடிக்க வேண்டும் என்றும்,தமிழ்நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், திரா விடம் கடந்து வந்த பாதைகளை மேற்கோள்காட்டி பேசியவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கடந்து வந்த பாதையையும்,அவர் எதிர் கொண்ட அரசியல் ரீதியிலான அழுத்தங்களையும் எடுத்துரைத்தார். திமுக ஏன் தொடர்ந்து விமர்சிக்கப்படுகிறது என்பதன் பின்னால் இருக்கும் சதிக்கோட்பாட்டை விவரித்தார். திமுக என்ற மாபெரும் இயக்கத்தை கட்டிக் காத்த பெரியார்,அண்ணா, கலைஞர் போன்ற தலைவர்களின் கொள்கைகளையும், அவர்கள் மேற்கொண்ட வழிகளையும், எதிர்கால சந்ததினருக்கு எடுத்து செல்ல வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். பாசிசத்தின் சூழ்ச்சிகளிலிருந்து விடுபட அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க அனைவரும் பாடுபட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். மேலும் பேசியவர் ‘தொலைக்காட்சி விவாதங்களில் தான் பங்கேற்ற போது, அதனை தொடராக முரசொலியில் வெளிவர உதவிய அண்ணன் முரசொலி செல்வத்திற்கு நன்றியினை தெரிவித்து கொண்டு, அந்த தொடர் தற்போது திராவிடம் 2.0 ஏன்.! எதற்கு..! என்ற தலைப்பில் புத்தக மாக வெளிவந்திருக்கிறது என்றும் அதனை அனைவரும் படித்து தெரிந்து கொண்டால் 2026 சட்டமன்ற தேர்தலை நாம் எதிர்கொள்வதற்கு எளிதாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டார். மேலும் பேசியவர் இந்த விழாவை ஏற்பாடு செய்த எஸ்.எஸ்.மீரான் அவர்களுக்கு பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறிய தனது உரையை நிறைவு செய்தார். அதனை தொடர்ந்து விழாவில் வந்திருந்தவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலும் அளித்தார் தி செந்தில் வேல்.

‘திராவிடம் ஏன், எதற்கு?’ என்ற நூலுக்கான அறிமுக உரையை வழங்கி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துகளை ஏஜிஎம். பைரோஸ் கான் தெரிவித்துக்கொண்டார்.

இந்த பிறந்த நாள் விழாவில் முத்தமிழ் சங்க தலைவர் ஷா,தமுமுக தலைவர் ஹாதி, இப்ராஹிம், தெலுங்கு சங்க தலைவர் ரமேஷ் பாபு, பிளாக் துலிப் செந்தில், ஜெஸிலா பானு, ரமேஷ் விஷ்வநாதன், காயிதே மில்லத் பேரவை பரக்கத் அலி, மதிமுக பாலா,ஊடகவியலாளர் முதுவை ஹிதாயத், வெங்கட்,பாலாஜி பாஸ்கரன்,கவிஞர் சசிகுமார்,பிரசன்னா, திண்டுக்கல் ஜமால் மொஹைதீன், இன்ஜினியர் பாலா, ரெங்கராஜன், சிராஜ், டயானா, அழகேசன்,அன்பு, மணிவேல், விஎம்.பிரபு,,செந்தில் பிரபு, , அப்துல்லா கனி, மச்சேந்திரன், பாண்டியன், அன்பு செல்வம், தாரிக், செய்யது இஸ்மாயில் ,பருத்தி இக்பால்,அபிவை ஜாஹிர்,சலீம் ஷேக் சாலை, கவிஞர் ஜியாவுதீன் ஆகியோர் துணை முதலைமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினர்.

நிறைவாக நவமபர் 27 பிறந்தநாள் காணும் தமிழக துணை முதலமைச்சருக்கும், டிசம்பர் 2 பிறந்தநாள் காணும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும் சேர்த்து கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு அமீரகத்திலிருந்து பல்வேறு பகுதியிலிருந்து வருகை தந்த கழக உடன்பிறப்புகளும், கூட்டணி கட்சியினர் எராளோமானொர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்யது இஸ்மாயில், பி.ஆர்.ஓ.அஹமது கபீர்,உள்ளிட்டோர் செய்திருந்தனர்.